பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 01 | வெள்ளிக்கிழமை | 15.03.2024 | அதிர்வு 227

## சபாநாயகரின் தலைவிதி 20 ஆம் திகதி நிர்ணயம்



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரே ரணையை 06

# வெடுக்குநாறிமலை கைது விவகாரம்: மனித உரிமை ஆணைக்குழு அசமந்தம்

### சட்டவிரோதக் கைதுகளுக்குத் துணைபோகின்றதா என்று கஜேந்திரன் ஆதங்கம்



(கே.வசந்தன்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சட்டவிரோதக் கைதுகளுக்கும், குற்றச்சாட்டுக்களுக்கும் துணை போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நீதி கோரி வவுனியா சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் வெடுக்குநாறிமலை ஆலயப் பூசகர் உள்ளிட்ட கைதிகளை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். 06

# வட்டுக்கோட்டை இளம் குடும்பஸ்தர் கொலை: 2 கடற்படையினர் விசாரணைப் பொறிக்குள்!

(ந.லோகதயாளன்)

யாழ். வட்டுக்கோட்டை இளம் குடும்பஸ்தரைக் கடத்தித் தாக்கிக் கொலை செய்த விடயத்தில் கடற்படையினர் கடமை தவறினரா எனக் கண்டறிய இரண்டு கடற்படையினர் மீது விசாரணை இடம்பெறுகின்றது.

கடந்த 11 ஆம் திகதி வன்முறைக் கும்பல், பொன்னாலையில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்கு அருகில் வைத்து, இளம் தம்பதியைக் கடத்தி அதில் குடும்பஸ்தரைக் தாக்கிக் கொலை செய்த சம்பவத்தில் தம்பதியர் கடற்படையினரிடம் தஞ்சம் அடைந்த போதும் கடற்படையினர் முன்னிலையிலேயே வன்முறைக் கும்பல் தாக்குதல் மேற்கொண்டு கடத்திச் சென்றதான சி.சி.ரி.வி. வீடியோ வெளியான நிலையில் சம்பவ நேரம் கடமையில் 06



# குடும்ப ஆட்சி இல்லையேல் மஹிந்தவே சிறந்த தலைவர்

### பொன்சேகா சொல்கின்றார்



“கொள்ளை அடிக்காமல், குடும்ப அரசியலுக்கு இடமளிக்காமல் இருந்திருந்தால் இலங்கை அரசியலில் அண்மைகாலத்தில் உருவான சிறந்த தலைவராக மஹிந்த ராஜபக்ஷ இருந்திருப்பார்.”

– இவ்வாறு ஐக்கிய 06




இன்னும் ஆறு மாதங்களில் நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவாரா? இல்லையா? – இதுதான் இப்போது இலங்கையில் மில்லியன் டொலர் கேள்வியாக உள்ளது.

கொழும்பின் ஒரு முக்கிய அரசியல் பிரமுகருடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர் இவ்விடயத்தில் சொன்ன தகவல் சுவாரஸ்யமானது. அதனால் அதை இங்கு பகிர்கிறேன்.

தன்னுடைய தேர்தல் வெற்றி 06

# நிர்மாணத்துறை பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி நிபுணர் குழுவை நியமிப்பாரம்!

நிர்மாணத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை உரிய முறையில் ஆராய்ந்து தற்போதைய பொருளாதார நிலைமையில் அப்பிரச்சினைகளுக்கு வழங்கக்கூடிய தீர்வுகளைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்க நிபுணர் குழுவொன்று நியமிக்க இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிர்மாணத்துறையில் உள்ள கைத்தொழில்துறையின ருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு என்பவற்றின் செயலாளர்களை உள்ளடக்கி, துறைசார் நிபுணர்களைக் கொண்ட இந்த நிபுணர் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுப்பார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அடுத்த வருடத்திற்குள் அனைத்து துறைகளிலும் உள்ள கைத்தொழில்துறையினருக்கு நிவாரணம் வழங்கி ஊக்கமளிக்க எதிர்பார்க்கிறார் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் தடைப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிப்பது, முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குதல், நிர்மாணச் சேவைகளை மேம்படுத்துதல் போன்றவற்றின் அடிப்படையில் பாரிய, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்கள் நிர்மாணத் துறை பிரதிநிதிகள் பலரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும், தெங்குக் கைத்தொழில் தொடர்பான உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்துறையினருக்கும் இடையிலான கலந்துரையாடலும் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தேசிய பொருளாதாரத்திற்கு தேங்காய் கைத்தொழிலின் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட ஒரு போட்டித் தொழிலாக நாட்டில் தென்னைச் செய்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் தேசிய தெங்குக் கைத்தொழில் சபையொன்றை நிறுவுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தெங்குக் கைத்தொழிலில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன், அத்துறையில் பணிபுரிபவர்கள் முன்வைத்த பிரச்சினைகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

நிலத்திலிருந்து அதிகபட்சப் பயனைப்பெற்று தெங்கு உற்பத்தியை அதிகரிக்கவும், அந்தத் தொழில்துறையை அபிவிருத்தி செய்யவும், திட்டமிட்ட வகையில் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்கு தெங்குக் கைத்தொழிலுடன் தொடர்புள்ள சகல நிறுவனங்களையும் ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் தெளிவுபடுத்தினார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் ஏனைய அமைச்சின் செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# ‘மக்கள் போராட்டத்தின் எதிரொலி’ நூல் ஜனாதிபதி ரணிலிடம் நேற்று கையளிப்பு



நாரஹேன்பிட்டி அபயாராமாதிபதி, மேல்மாகாண பிரதம சங்கநாயக்க தேரரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தருமான வண. கலாநிதி முருத்தெட்டுவே ஆனந்த தேரரால் எழுதப்பட்ட “மக்கள் போராட்டத்தின் எதிரொலிகள்“ (ஜனஅரகலயே தோங்காரய) எனும் நூல் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர், ‘இடைவிடாத போராட்டத்தின் உண்மைக் கதை’, ‘சிங்கள மருத்துவத்தின் மறைவு’, ‘நைடிங்கேள் குணாதிசயம்’, ‘ஜெனிவா நெருக்கடியின் எதிரொலிகள்’, ‘ரன் ஹிய’ மற்றும் ‘இருளுக்கு வெளியே’ ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

கெடமான்னே குணானந்த தேரர், நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்நூல் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# 1994 - 1996 இல் புதைக்கப்பட்ட புலிகளின் சடலங்களே கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்பு!

## தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றுக்கு அறிக்கை

(ந.லோகதயாளன்)

கொக்குத்தொடுவாய் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட சடலங்கள் 1994 மற்றும்1996 ஆண்டுகளுக்கு இடைப் பட்ட காலத்தில் புதைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுடையவை என முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் கையளிக்கப்பட்ட இடைக்கால அறிக் கையில் தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றில் கையளித்த இந்த இடைக்கால அறிக்கை மொத்தமாக 35 பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் உயிரிழக்கும் முன்னர் துப்பாக்கிச் சண்டையை எதிர்கொள்ள வேண்டியிருந்ததாகவும் அந்த இடைக்கால அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சடலங்கள் புதைக்கப்பட்ட சம்பவம் 1994ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெறவில்லை என்பதோடு, 1996ற்குப் பின்னர் இடம்பெறவும் இல்லை எனவும் அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

புதைகுழியில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்களை வைத்து சடலங்கள் 1994 மற்றும் 1996ற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என தீர்மானிக்கப் பட்டதெனவும், தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ வின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தில் இருந்து கொக் கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில் நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர்க் குழாய் பதிக்க நிலத்தை தோண்டும் வேளையில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் 29ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மனித உடல் பாகங் கள் மற்றும் ஆடைகளின் ஒரு தொகுதி கண்டெடுக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் 2023 நவம்பர் 29ஆம் திகதி ஒன்பதாவது நாளாக மேற்கொள்ளப் பட்டு நிறுத்தப்பட்ட போது புதைகுழியில் இருந்து குறைந்தது 40 பேரின் எச்சங்கங்கள் மீட்கப்பட்டிருந்தன என்பது குறிப் பிடத்தக்கது.

இதேநேரம் அடுத்த கட்ட அகழ்விற்காக ஏப்பிரல் 4ஆம் திகதி திகதியிடப்பட்டுள்ளபோதும் அதற்கான எந்தவொரு நிதியும் அரசு இதுவரை விடுவிக்காத நிலையில் ஏப்பிரல் 4 ஆம் திகதி அகழ்வுப் பணிகள் இடம்பெறுவதில் சந்தேகம் நிலவுகின்றது.

# கோட்டாவின் நூலால் பஸில் கடும் கடுப்பில்

## ராஜபக்ஷக்களின் பேச்சாளர் உதயங்க தகவல்



கோட்டாபய ராஜபக்ஷ எழுதியுள்ள நூல் தொடர்பில் பஸில் ராஜபக்ஷ கடும் சீற்றத்துடன் இருக்கின்றார் என்று ராஜபக்ஷ குடும்பத்தின் பேச்சாளராகக் கருதப்படுகின்ற ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரி வித்துள்ளார்.

அத்துடன், மொட்டுக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கி இருந்தால் கட்சியும் இன்று காணாமல்போய் இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

“கோட்டாபயவின் ஐந்து நூல்களைக் கொள்வனவு செய் தேன். மஹிந்த அண்ணனுக்கு ஒன்றை வழங்கினேன். பஸில் அண்ணனுக்கு வழங்குவதற்குச் சென்றபோது அவர் கோபமடைந்த நிலையில் காணப்பட்டார். இதனால் நூலை வழங்கவில்லை. திரும்பி வந்தேன்.

கோட்டாபயவின் நூலைப் பெரும்பாலானவர்கள் வாசிக்க வில்லை. இதனால் அது பற்றி தவறான அர்த்தப்படுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பஸிலும் தவறான அபிப்ராயத்தில் இருக்கின்றார் என்றே நான் நினைக்கின்றேன். புத்தகத்தை முறையாக வாசித்தால்தான் அதன் உள்ளடக்கம் புரியும்.

பஸில் ராஜபக்ஷவிடமும் நூல் பற்றி எவராவது தவறாக எடுத்துரைத்திருக்கலாம். அவ்வாறு கூறும்போது கோபம் வருவது நியாயமானது. ஏனெனில் கட்சித் தலைமைத்துவம் வழங்கப்படவில்லை எனவும், அதனால்தான் கோட்டாபயவின் ஆட்சி தோல்வி அடைந்தது எனவும் ஒருவர் பஸிலிடம் கூறி யுள்ளார்.

ஜனாதிபதிப் பதவியையே விட்டு ஓடியவர், கட்சித் தலை மைத்துவத்தை வழங்கி இருந்தால் என்ன நடந்திருக்கும்? அன்று பஸில் எடுத்த முடிவு சரி என்பது இன்று புலனாகின்றது.

கோட்டாபயவின் நூல் தொடர்பில் ராஜபக்ஷ குடும்பம் மகிழ்ச்சியடையக் கூடிய நிலையில் இல்லை.” - என்றார்.

# இந்தியத் தூதர் - பஸில் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தியத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இருதரப்பு உறவுகள், சமகால அரசியல் விடயங்கள், இருநாடுகளின் நலன்களுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம், கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

இந்தியா இலங்கைக்கு வழங்கியுள்ள அபிவிருத்திகள் தொடர்பிலும் சிறுபான்மையினருக்கான விடயங்கள் தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதாகவும் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

# கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 பேரும் தொடர்ந்து விளக்கமறியலில்

கொழும்பு, மார்ச். 15

சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோப்ளின் தடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நேற்றைய தினமும் பிரதிவாதிகள் சார்பில் பிணை கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் நீதிவான் அதனை நிராகரித்துள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சிறைச்சாலை அதிகாரிகளினால் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மருந்து விநியோகப் பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் டீ.சுதர்சனவும் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்படி, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 பேரும் மீள விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# 67 ஆயிரம் சுற்றுலாப்பயணிகள் 10 நாள்களில் நாட்டுக்கு வருகை



இந்த மாதத்தின் கடந்த 10 நாள்களில் மாத்திரம் 67 ஆயிரத்து 114 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ரஷ்யாவில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இந்த மாதத்தின் இதுவரையில் ரஷ்யாவில் இருந்து 9 ஆயிரத்து 783 பேரும், இந்தியாவில் இருந்து 9 ஆயிரத்து 735 பேரும் ஜேர்மனியில் இருந்து ஆறாயிரத்து 301 பேரும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

கடந்த மாதத்தில் மாத்திரம் 2 லட்சத்து 18 ஆயிரத்து 350 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



# மலையகத் தொழிலாளர்களுக்கு ரூ.1,700 சம்பளம் வழங்க முடியும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1,700 ரூபா வழங்க முடியும் எனவும் எதிர் வரும் 30 நாள்களுக்குள் சம்பள உயர்வு கிடைக்கும் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை ஹொலிரூட் தோட்டத்தில் தீயினால் பாதிக்கப்பட்டு, தற்காலிக குடில்களில் வசித்த 24 குடும்பங்களுக்கு, குடிதண்ணீர், மின்சாரம், உட்கட்டமைப்பு உட்பட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடுகள், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமானால் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், அவர்களுக்கு பிரத்தியேக “முகவரி” வழங்கப்பட்டு, வீடுகளுக்கு முன் வைப்பதற்கான தபால் பெட்டியும் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் உரையாற்றுகையில் –

“மலையக தமிழர்கள் தமது தேசிய அடையாளத்தை சனத்தொகை கணக்கெடுப்பின் போது மலையகத் தமிழர் என வெளிப்படுத்துவதற்கான ஏற்பாட்டை உள்வாங்குவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் ஒரு லட்சத்து 76 ஆயிரம் குடும்பங்களுக்கு சௌமியபூமி காணி உரிமை வழங்கும் திட்டம் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் ஜனன தினத்தன்று ஆரம்பமாகும்.” – என்றார்.

















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதி என்ற அரசியல் நிலைப்பாடு தெளிவாகப் புலனாகாத வரையில் தேர்தலில் போட்டியிடும் அறிவிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கவே மாட்டார் என்று அடித்து கூறுகின்றார் அந்த பிரமுகர்.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்ட தந்திரோபாயத் தலைவர் என்று சர்வதேச ரீதியில் தமக்குக் கிட்டியுள்ள நற்பெயரை, மீண்டும் ஜனாதிபதி தேர்தல் தோல்வி என்ற கசப்பான பாடம் மூலம் கெடுத்துக்கொள்ளக் கூடாது என்பதில் அவர் மிக உறுதியாக இருக்கின்றார். அதற்குக் காரணம் உண்டு.

மாறிவரும் விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சிகளின் அடிப்படையில் ஐம்பதுக்கும் குறையாத முன்னணி நாடுகளை ஒன்று திரட்டி, காலநிலை – சுற்றுச்சூழல் தொடர்பான ஒரு புதிய சர்வதேசக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் திட்டமிடல் ஐ.நா. மட்டத்திலும் சர்வதேசத் தளப் பரப்பிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தக் கட்டமைப்பை ஸ்தாபித்து, முன்னெடுக்கும் நிறைவேற்றதிகாரப் பொறுப்பை ரணிலுக்கு வழங்குவது பற்றிய விவகாரம் முக்கிய உலகத் தலைவர்கள் மட்டத்தில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

சர்வதேச தொடர்பாடல்கள், உறவுகள், அனுபவம், இராஜதந்திரம் மற்றும் மொழி – சட்டம் – பொருளாதாரம் போன்ற விடயங்களில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ள தேர்ச்சியை சர்வதேச மட்டத்தில் பயன்படுத்துவதற்கு உள்ள வாய்ப்பை ஜனாதிபதித் தேர்தல் தோல்வி மூலம் குழப்பிக்கொள்ள ரணில் விரும்ப மாட்டார் என்கின்றார் அந்தப் பிரமுகர்.

எனினும் வேறு அரசியல் தரப்புகளிடமிருந்து இந்தத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை ஊர்ஜிதப்படுத்த இயலவில்லை.

ரணில் நரித் தந்திரசாலி. தனக்குரிய பாதையை அவர் கனகச்சிதமாக வகுத்துக் கொள்வார்.

## குடும்ப ஆட்சி இல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் சக்தியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மஹிந்த ராஜபக்ஷ எனக்குப் பல கெடுதல்களைச் செய்தார். எனக்கு எதிராக கீழ்த்தரமான நடவடிக்கைகளை முன்னெடுத்தார். ஆனால், நாடாளுமன்றத்தில் இன்று கண்டாலும் வணக்கம் சொல்லும் வழமை உள்ளது. ஒரு கால கட்டத்தில் அவர் எனது தலைவராக இருந்தார். அவரிடம் கீழ்த்தரமான பழக்கங்கள் இருப்பதுபோல் நல்ல பழக்கங்களும் உள்ளன.

கொள்ளை அடிக்காமல், குடும்ப அரசியல் செய்யாமல் இருந்திருந்தால் இலங்கை அரசியலில் அண்மைய காலத்தில் உருவான சிறந்த தலைவராக அவர் இருந்திருப்பார் என நான் நம்புகின்றேன்.

இவ்வாறு நான் கூறுவதால் மஹிந்த பக்கம் சாயப் போகின்றேன் என நினைக்க வேண்டாம். ராஜபக்ஷக்களுடன் இனி அரசியல் பயணம் கிடையாது.

அதேபோல் ரணிலையும் மதிக்கின்றேன். அவர்தான் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார்.

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி என்பது குடும்பச் சொத்து கிடையாது. நான் எனது ஆதரவாளர்களுடன் இருக்கின்றேன். எனக்கு வாக்களித்த மக்கள் பக்கம் நிற்கின்றேன்.” – என்றார்.

## சபாநாயகரின் தலைவிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த வாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் 20 ஆம் திகதி புதன்கிழமை விவாதம் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வாக்கெடுப்பு 20 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணையவழி பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றும்போது சபாநாயகர் செயற்பட்ட விதம் தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டு ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்தனர்.

## வெடுக்குநாறிமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வவுனியா சிறைச்சாலைக்குச் சென்று விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 8 பேரையும் பார்வையிட்டேன். அதில் 5 பேர் மூன்றாவது நாளாகவும் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். பொய்யான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. அவர்களது உடல் நிலை மோசமடைகின்றது. அதில் சிலருக்கு ஆஸ்மா, சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் உள்ளன. அவர்கள் உரிய முறையில் மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கப்படவில்லை. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் இதுவரை அவர்களைப் பார்வையிடவில்லை. கைது இடம்பெற்ற அன்றே மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தபோதும் இதுவரை பார்வையிடவில்லை. மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சட்ட விரோத கைதுகளுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் துணை போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் தெரிவித்த கருத்து முற்றுமுழுதாகப் பொய். கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்துக்கு வருவதற்கு முன்பிருந்தே அவர்கள் உணவு எதனையும் உண்ணவில்லை. அதற்குப் பிற்பாடும் அவர்கள் உணவு உண்ணவில்லை. மூன்றாவது நாளாக அவர்கள் உணவு உண்ணவில்லை. அவர்களது குடும்பத்தினர் நேரடியாகச் சென்று பார்வையிட்ட போதும் அவர்கள் உணவு உண்ணவில்லை என்பதைத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆலய நிர்வாகத்தினரும் சென்று பார்வையிட்டிருந்தனர். அவர்களும் உண்ணாவிரதம் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளார்கள். ஆகவே, சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் கூறியது தவறானது. இவர்கள் மீது நெருக்குவாரத்தை உருவாக்கிப் பொய்யாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அவர்களை ஏற்றுக்கொள்ள வைக்க இவ்வாறு செயற்படுகின்றார்களா அல்லது அவர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்த வைக்க முயல்கின்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே, இதனை விளங்கிக்கொண்டு புலம்பெயர் தமிழ் மக்களும் இராஜதந்திர அழுத்தங்களை கொடுக்க வேண்டும். கொழும்பில் உள்ள இராஜதந்திரச் செயலங்களும் இந்த விடயத்தில் கரிசனை செலுத்த வேண்டும்.

இன்று வெள்ளிக்கிழமை நெடுங்கேணியில் வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு அனைவரும் அணி திரண்டு ஆதரவு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன், நாளை சனிக்கிழமை கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் இடம்பெறவுள்ள போராட்டத்திலும் சகலரும் அணிதிரண்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

## வட்டுக்கோட்டை இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்தஇரண்டுகடற்படையினருக்குஎதிராகக் கடற்படையினர் தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் கடற்படையினரின் காவலரணில் இருந்த சி.சி.ரி.வி. காணொலியைப் பொலிஸாரின் புலனாய்வு விசாரணைக்காக வழங்கிய நிலையில் அதனைப் பொலிஸார் வெளியே கசிய விட்டுள்ளனர் என்று கடற்படை தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.





# மட்டு. மாங்காட்டில் விபத்து!



(பழுவூரான்)

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் மாங்காடு பகுதியில் நேற்று வியாழக்கிழமை பாரிய விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியருகில் இரும்புத் தளபாடங்களுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பட்டா ரக வானத்தில் மோதுண்டத்தில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக களுவாஞ்சிகுடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பத்தில் பஸ்ஸில் பயணித்தவர்களில் 5 பேருக்கு சிறு காயம் ஏற்பட்டுள்ளதாகவும், தெய்வாதீனமாக உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவத்தில் அருலிருந்து பஸ் தரிப்பிடம் முற்றாக உடைந்து சேதமடைந்துள்ளது. பட்டா ரக வாகனமும், பஸ்ஸின் முன்பகுதியும் பெரும் சேதம் அடைந்துள்ளன.

விபத்து இடம்பெற்ற இடத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடப் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தரமற்ற புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் வைத்தியசாலைகளுக்கு விநியோகமாம்



## நீதிமன்றில் அறிவிப்பு

தரமற்ற சுவைரஒஅையடி எனப்படும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் நாட்டிலுள்ள வைத்தியசாலை கட்டமைப்பிற்குள் விநியோகிக்கப்பட்டுள்ளன என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நேற்று நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

சர்ச்சைக்குரிய மருந்து கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்கு மாளிகாகந்த நீதிவான் லோச்சனி அபேவிக்ரம முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் இதனை அறிவித்தார்.

வழக்கின் முதலாவது சந்தேக நபரான சுதத் ஜனக பெர்னாண்டோ என்பவர், 1,200 புற்றுநோய் எதிர்ப்பு மருந்துக் குப்பிகளை வைத்தியசாலைகளுக்கு விநியோகித்துள்ளார் என பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றுக்கு அறிவித்தார்.

இந்த வழக்குடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் சார்பில் ஏற்கனவே சட்டத்தரணிகளால் நீதிமன்றத்தில் பிணை கோரிக்கை முன்வைக்கப் பட்டிருந்தது.

இந்த கோரிக்கையை நிறைவேற்ற முடியாதென மாளிகாகந்த நீதிவான் லோச்சனி அபேவிக்ரம நேற்றுத் தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில், எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் வழங்கப்பட்டுள்ள சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை என தெரிவதாலும் பிணை வழங்கப்படின், பொதுமக்களிடையே கோபத்தை ஏற்படுத்தும் நிலைமை உருவாகக்கூடுமென்பதாலும் பிணை கோரிக்கையை நிராகரிக்கின்றார் என நீதிவான் அறிவித்தார்.

இதற்கமைய, சந்தேகநபர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் லோச்சனி அபேவிக்ரம உத்தரவிட்டார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## முற்கூட்டி பொதுத் தேர்தல் இல்லை

எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்பது தொடர்பில் நாட்டின் ஜனாதிபதிக்கும் ஆளும் மொட்டுக் கட்சிக்கும் இடையில் கருத்து வேறுபாடு - முரண்பாடு - நீடிப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுத் தேர்தல் ஒன்றை முற்கூட்டியே நடத்தினால் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை முழுமையாகப் பெற முடியாவிட்டாலும், ஏனைய கட்சிகளை விடவும் அதிக ஆசனங்களை கைப்பற்ற இயலும் என்று மொட்டுக் கட்சியின் தந்திரோபாயம் வகுக்கும் தலைவர் பஸில் ராஜபக்ஷ கருதுகின்றார் எனத் தெரிகிறது.

ஜனாதிபதி தேர்தல் முதலில் நடந்தால், அதன் பின்னர் நடக்க கூடிய நடக்கக்கூடிய பொதுத் தேர்தல் தமக்குச் சாதகமாக வருமா என்பது உறுதியில்லை என பஸில் ராஜபக்ஷ தரப்பு கருதுகிறதாம்.

அதனால் நேரத்துடன் நாடாளுமன்றத்தைக் கலைத்து முற்கூட்டியே பொதுத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பஸில் ராஜபக்ஷ நேரடியாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தில் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கோ அல்லது நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கோ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பில் இருந்து சாதகமான பதில் பஸில் ராஜபக்ஷ தரப்புக்கு வழங்கப்படவேயில்லை என்று தெரிகின்றது. ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என பஸில் தரப்புக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

ஆனால், பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சில பிரமுர்கள் முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் விடயத்தில் இருந்து தாங்கள் பின்வாங்கப் போவதில்லை, அதற்காகத் தொடர்ந்து வலியுறுத்துவோம்எனக்கூறிவருகின்றனர். ஆயினும் வலிமையான அழுத்தத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பின் மீது செலுத்தக் கூடிய விதத்தில் எம்.பிக்களிடம் இருந்து தேவையான ஆதரவை இவர்களால் பெற முடியவில்லை என்றும் சுட்டப்படுகின்றது.

முற்கூட்டியே நடத்தப்படக் கூடிய பொதுத் தேர்தலின் ஊடாகவே கட்சியை மீளப் பலமாகக் கட்டியெழுப்ப முடியும் என பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவும் அவரது அணியினரும் கருதுகின்றனர்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைக்காவிட்டால் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானமொன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது குறித்தும் இவர்கள் ஆலோசனைகளை நடத்தியுள்ளனர்.

ஆனால், எம்.பிக்களிடம் இருந்து தேவையான ஆதரவை பெற முடியாததால் இத்திட்டம் தமக்கு வெற்றியளிக்காதென பொதுஜன பெரமுன வட்டாரங்கள் உணர்ந்துள்ளன என அறிய முடிகிறது.

இப்போதைய அரசமைப்புத் திருத்தங்களின்படி -

நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றும் தீர்மானம் ஒன்றின் மூலமே தன்னைத்தானே முறைப்படி முன்கூட்டியே கலைக்க முடியும்.

இல்லையேல் அதன் முதல் இரண்டரை ஆண்டு பதவிக்காலத்தின் பின்னர் எச்சமயத்திலும் நாடாளுமன்றத்தை கலைத்துப் பொது தேர்தலுக்கு ஜனாதிபதியே உத்தரவிட வேண்டும்.

இந்த இரண்டுமே நடைபெறாவிட்டால் நாடாளுமன்றம் அதன் 5 ஆண்டு பதவிக்காலத்தின் முடிவில்தான் கலையும். இதுதான் நிலைமை.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் வரை உள்ளது எனச் சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அதற்கிடையில் -

முற்கூட்டியே தேர்தலை நடத்தும் முடிவை பதவியில் இருக்கும் ஜனாதிபதி எடுத்து அறிவிக்கும் வரை பொதுத் தேர்தலை நடத்த முடியாது என்பதுதான் சட்ட நிலைமை.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றி பெறுவதற்கான உறுதியான சூழல் ஏற்படாத வரை, முற்கூட்டியே நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலைக்க மாட்டார் என்பது அவர் பக்க நிலைப்பாடாக இருக்கின்றது என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் உறுதியாகக் கூறுகின்றன.

# குடியுரிமை தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கே உண்டு

## அண்ணாமலை தெரிவிப்பு



இந்திய குடியுரிமை திருத்தச் சட்டம் விடயத்தில் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளிப்படுத்தி வருகின்றன என பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்தை இந்திய மத்திய அரசு அண்மையில் அமுல்படுத்தியிருந்தது.

இதனையடுத்து இந்த சட்டத்துக்கு எதிராக பல்வேறு கருத்தாடல்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்த சட்டத்துக்கு அமைய, 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இந்தியாவில் தஞ்சமடைந்த இஸ்லாமியர்கள் அல்லாத ஏனைய தரப்பினர் தங்களுக்கான குடியுரிமையை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிலையில் 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு பின்னர் தமிழகத்தில் தஞ்சமடைந்த இலங்கையர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு இந்த சட்டத்தின் ஊடாக பாதிப்பு ஏற்படுவதாக தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் குற்றஞ்சாட்டியிருந்தன.

அத்துடன் தமிழகத்தில் அதன் விதிகளை அமுல்படுத்தப் போவதில்லை என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்திய குடியுரிமை திருத்தச் சட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் அண்ணாமலை, குடியுரிமை தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கே உள்ளதாக தெரிவித்துள்ளார்.

# மம்தா பானர்ஜிக்கு காயம் மருத்துவமனையில் அனுமதி

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியின் நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மம்தாவின் நெற்றியில் ரத்தம் வழியும் புகைப்படங்களை திரிணமூல் காங்கிரஸ் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

நெற்றியின் நடுவில் ஆழமான வெட்டு காயத்துடன் முகத்தில் ரத்தம் வழியும் நிலையில் மருத்துவமனை படுக்கையில் மம்தா சிகிச்சை பெறும் புகைப்படங்களை திரிணமூல் காங்கிரஸ் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

தனது வீட்டில் இருக்கும் போது மம்தா கீழே விழுந்துவிட்டார் என்று முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், உறுதியான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

திரிணமூல் காங்கிரஸ் எக்ஸ் பக்கத்தில், “எங்கள் தலைவர் மம்தா பானர்ஜிக்கு பெரிய காயம் ஏற்பட்டுள்ளது. தயவு செய்து அவருக்காக உங்கள் பிரார்த்தனைகள் வேண்டும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி விபத்தில் காயமடைந்த செய்தியை அறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளேன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.



“மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, சாலை விபத்தில் காயமடைந்ததை அறிந்து அதிர்ச்சியும் மிகுந்த வேதனையும் அடைந்தேன். இந்தக் கடினமான நேரத்தில் அவரை எண்ணிக் கவலை கொள்கிறேன். அவர் விரைந்து நலம் பெற விழைகிறேன்” என்று முதல்வர் ஸ்டாலின் அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.

# மத்திய அரசுக்கு எதிராக விவசாயிகள் போராட்டம்



மத்திய அரசின் விவசாய விரோதக் கொள்கைளை எதிர்ப்பதாக கூறி, டில்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் நேற்று நடத்தப்பட்ட ‘கிசான் மஸ்தூர் மகாபஞ்சாயத்து’ நிகழ்வில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது, அவர்கள் மத்திய அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினர்.

மூன்று விவசாய சட்டங்களை எதிர்த்து டில்லி எல்லையில் போராட்டத்தை நடத்திய சம்யுக்தா கிசான் மோர்ச்சா என்ற விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு, மத்திய அரசின் கொள்கைகளுக்கு எதிராக தீவிரமான போராட்டத்தை முன்னெடுக்க கிசான் மஸ்தூர் மகாபஞ்சாயத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தது.

# ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்!

ஜப்பானின் கிழக்குப் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது ரிக்டர் அளவுகோளில் 5.8 மெக்னிடியூட்டாக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தின் மையம் புகுசிமா மாகாணத்தின் கடற்கரையை மையப்படுத்தியிருந்தது.

அங்கு வலுவான நடுக்கம் பதிவாகியுள்ளது, எனினும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை.

இந்தநிலையில் சேத விபரங்கள் தொடர்பில் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

# ரஷ்ய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது உக்ரைன் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல்







ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது, உக்ரைன் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த சில மாதங்களாக ரஷ்யாவின் சக்தி உற்பத்தி நிலையங்கள் மீது உக்ரைன் இந்த தாக்குதலை நடத்தி வருகின்றது.

அந்தவகையில் மேற்படி தாக்குதலில் பாரிய அழிவினை ரஷ்யா சந்தித்துள்ளதாக உக்ரைன் சுட்டிக்காட்டியுள்ளது.

தாக்குதல் காரணமாக எரிபொருளின் விலையை 02 வீதமாக அதிகரிப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்துள்ளார்.

இதேவேளை, அவர் ஜனாதிபதி தேர்தல் ஒன்றிற்காக காத்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், ரஷ்ய – உக்ரைன் மோதல் காரணமாக உலக வர்த்தகத்தில் தானியங்களுக்கான விலைகள் அதிகரித்திருந்த நிலையில் எரிபொருள் விலை அதிகரிக்கக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் “ரிக்டொக்” செயலியை தடை செய்யும் பிரேரணை நிறைவேற்றம்




“ரிக்டொக்” செயலியை தடை செய்யும் முக்கிய பிரேரணையை அமெரிக்க பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியுள்ளது.

பிரேரணைக்கு ஆதரவாக 352 வாக்குகளும் எதிராக 65 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

அமெரிக்காவில் உள்ள “ரிக்டொக்” நிறுவனத்தின் சொத்துகளை 6 மாதங்களுக்குள் தடை செய்வது தொடர்பான சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதால், சுமார் ஆறு மாதங்களுக்குள் “ரிக்டொக்” செயலி விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் அமெரிக்காவில் இந்த செயலி தடை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரேரணை இரு கட்சிகளின் வாக்கெடுப்பில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டாலும், அதனை சட்டமாக மாற்றுவதற்கு செனட் சபை அனுமதி வழங்கிய பின்னர், ஜனாதிபதி கையெழுத்திட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 170 மில்லியன் அமெரிக்கர்கள் “ரிக்டொக்” செயலியை பயன்படுத்துகின்றனர்.

“ரிக்டொக்” ஆனது 2012 இல் நிறுவப்பட்ட சீன தாய் நிறுவனமான டீலவநனுயஉந-க்கு சொந்தமானது.

பீஜிங்கை தளமாகக் கொண்ட நிறுவனம் கேமன் தீவுகளில் பதிவு செய்யப்பட்டு, ஐரோப்பா, அமெரிக்கா முழுவதும் அதன் கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

இந்த பிரேரணை இரு கட்சிகளின் வாக்கெடுப்பில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டாலும், அதனை சட்டமாக மாற்றுவதற்கு செனட் சபை அனுமதி வழங்கிய பின்னர், ஜனாதிபதி கையெழுத்திட வேண்டும்.

“ரிக்டொக்: இன் தலைமை நிர்வாகியான ணூாழர ளுநை ஊஹூர, நிறுவனம் தனது தரவை பாதுகாப்பாக வைத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், ஆயிரக்கணக்கான அமெரிக்க வேலை வாய்ப்புகளுக்கு ஆபத்து ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# சிங்கள - பௌத்த பேரினவாத வெறித்தனத்தின் வெளிப்பாடே வெடுக்குநாறி மலை அட்டூழியம்!

## அதற்கு எதிராகத் தமிழ் மக்களை ஒன்று திரள அழைக்கின்றது தமிழ் சிவில் சமூக அமையம்

வெடுக்குநாறி மலை விவகாரம் போன்ற தமிழ் மக்களின் தேசிய அடையாளங்கள் மற்றும் தேசிய இருப்பு மீதான அனைத்து வகை அழிப்பு நடவடிக்கைகளுக்கும் எதிராக மத, பிராந்திய வேறுபாடுகள் இன்றி, தமிழ் மக்கள் ஒற்றுமையாக அணிதிரள வேண்டியமையே இன்றைய காலத்தின் தேவையாகும்.

– இவ்வாறு தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துள்ளது.

தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளர்களான அருட்பணி வீ. யோகேஸ்வரன், பொ. ந. சிங்கம் ஆகியோர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:–

வெடுக்குநாறி மலை விவகாரம் சிறீலங்காவில் நல்லிணக்கக் கதையாடலின் பொய்மையை அம்பலமாக்குகின்றது.

சிறீலங்காவின் தொல் பொருளியல் திணைக்களமானது இத்தீவில் ஆரிய வம்சத்தினராகிய சிங்கள பௌத்தர்களே ஆதிக் குடிகள் என்பதாக நிறுவுவதை மட்டுமே தனது (அனைவருக்கும் தெரிந்த) இரகசிய வேலைத் திட்டமாக வரித்துள்ளது.

இத்தீவிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறிய காலத்திலிருந்து இலங்கையில் காணப்படும் பௌத்த தொல் பொருளியற் சின்னங்கள் அனைத்தையும் சிங்கள–பௌத்த தொல்பொருள் சின்னங்களாக நிறுவுவது என்பது இத்திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்து வருகின்றது. அதுமட்டுமல்லாது இத்தீவில் தமிழர்களின் தொன்மையை சிங்களவர்களின் தொன்மைக்கும் முந்தியதாக நிறுவக் கூடிய எந்த ஒரு தொல் பொருள் சின்னத்தைக் கண்டு பிடிக்கும் போதும் அதைக் கைவிடுவது, மறைப்பது, அழிய விடுவது அல்லது சிங்கள - பௌத்த தொல்பொருள் சின்னமாகத் திரிபுபடுத்துவது என்பனவும் சிறீலங்காவின் தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிகளாக அமைந்துள்ளதென்பது தமிழர்கள் அனைவருக்கும் வரலாறு தந்த படிப்பினை ஆகும்.

கடந்த 75 வருடங்களாகத் தொல் பொருளியல் திணைக்களத்தின் மூலமாக தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் இவ்வாறான விஞ்ஞான பூர்வமற்ற, திரிக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வு முடிவுகளை வெளியிடுவதன் மூலம் வடக்கு–கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டைச் சிதைத்து, சிங்கள - பௌத்த மயமாக்கல் மூலமாக சிங்கள - பௌத்தர்களின் பாரம்பரிய வாழிடமாக வடக்கு - கிழக்கைக் மாற்றியமைத்து, தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதே சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முதன்மை நோக்காக இருந்து வருகின்றது.

அரசின் அனுசரணையிலான விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் போலவே தமிழர் பகுதிகளில் இவ்வாறு பௌத்த தொல் பொருள்சின்னங்களைக் கண்டடைவது என்பதுவும், தமிழர்களின் தாயகத்தைச் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிப்பதற்கான முதற்படியாக எப்போதும் இருந்து வருகின்றமையே இவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் தமது இருப்புத் தொடர்பான அச்சத்தை ஏற்படுத்தக் காரணமாகின்றன.

இவ்வாறான பல நூற்றுக்கணக்கான வேலைத்திட்டங்களுள் வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய விவகாரமும் ஒன்று.

நெடுங்காலமாகத் தமிழ்ச் சைவ மக்களின் வழிபாட்டிடமாக இருந்து வந்த வெடுக்குநாறி மலையில் 2017 களில் திடீரென முளைத்த பௌத்த தொல் பொருள் சின்னம் என்ற கோரிக்கை வெடுக்குநாறி மலையை தனியே பௌத்த சின்னமாக மட்டுமன்றி, கூட்டாக சிங்கள - பௌத்த சின்னமாக வரிப்பதை நோக்காகக் கொண்டது என்பது தொல் பொருளியல் திணைக்களத்தின் பதிவுகளிலிருந்து அப்பட்டமாகத் தெரிய வருகின்றது.

அன்றிலிருந்து நீதிமன்ற விவகாரமாக உள்ள இரு இனங்களுக்கிடையிலான இந்த முரண்பாடு தொடர்பாக தொல் பொருளியல் திணைக்களம் மட்டுமல்லாது இவ்வாறான முரண்பாடுகள் அனைத்திலும் தமிழர்களுக்கெதிராக நியாயமற்ற சட்ட மற்றும் வன்முறை வழியிலான பலத்தைச் சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கு ஆதரவாகப் பிரயோகித்து வருகின்ற சிறீலங்காவின் காவல்துறையும் இவ்விடயத்தில் எப்போதும் போல் தொடர்ச்சியாக பக்கச்சார்பாகவே நடந்து வருகின்றது.

இதுவரை நடாத்தப்பட்ட நீதிமன்ற வழக்குகளில் தமிழ் மக்களின் பக்கமுள்ள நியாயத்தை எடுத்துக் காட்டுவதாகவே தீர்ப்புகள் வழங்கப்பட்டு வந்துள்ள நிலையிலும் விடாக்கண்டனாகத் தொல் பொருளியல் திணைக்களமும், காவல் துறையும் எவ்வாறேனும் தமிழ் மக்களை வெடுக்குநாறி மலையிலிருந்து நிரந்தரமாக வெளியேற்றும் நோக்குடன் குதர்க்கமான, நியாயமற்ற நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த மார்ச் 08 ஆம் திகதி சைவர்களின் மிக முக்கியமான ஆன்மிக வழிபாட்டு நாளான மகா சிவராத்திரியின்போது வழிபாடுகளைத் தடை செய்ய காவல் துறையினர் பல தடவைகள் முயன்ற போதெல்லாம் ஒவ்வொரு தடவையும் நீதிமன்ற ஆணையை பார்வையிட்டு அதனை ஏற்று வெளியேறியிருந்தனர். ஆனால் தொடர்ந்தும் பல்வேறு வகைகளில் மீண்டும் மீண்டும் ஆலய வழிபாடுகளுக்கும் மக்களுக்கும் இடையூறும், அவமரியாதையும் செய்யும் வகையில் செயற்பட்டுள்ளார்கள். ஈற்றில் நீதிமன்றம் வழங்கயிருந்த அனுமதியையும் மீறி வழிபாட்டை முற்றாகத் தடுத்து நிறுத்தியமையுடன், சிறீலங்கா இராணுவத்தின் முள்ளிவாய்க்காற் படுகொலைக் காணொளிகளை நினைவூட்டும் வகையிற் கைது செய்யப்பட்டவர்களையும் நடாத்தியுள்ளார்கள். செய்தித்தாள்களுக்கு ஒன்றும், நீதிமன்றத்தின் வழக்கிற்கு இன்னொன்றுமாகக் குற்றச்சாட்டுகளை மாற்றி மாற்றிக் கூறி, எவ்வாறேனும் சிறைப்படுத்தியுள்ள பக்தர்களைக் கூடிய காலம் சிறையில் வைத்திருப்

தொடர்ச்சி ▼

# ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரியுடன் வடக்கு ஆளுநர் நேற்று சந்தித்துப் பேச்சு



அரச சார்பற்ற மற்றும் சர்வதேச அமைப்புகளை ஒருங்கிணைப்பதற்கான தேவை காணப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் இலங்கைக்கான கூட்டுறவு அபிவிருத்தி பிரிவின் தலைமை அதிகாரி லின்டா எரிக், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை ஆளுநரின் யாழ்ப்பாணத்திலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இன்று நேற்று சந்தித்து உரையாடினார்.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளுடன் அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவிகளும் தேவைப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

சர்வதேச அமைப்புகளை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் பின்னடைந்துள்ளமையால் அவற்றை மீள ஒருக்கிணைப்பதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் உதவி புரிய வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

மாகாணத்தில் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிக்கல் காணப்படுகிறது. அனைத்து அரச திணைக்களங்களையும் டிஜிடல் மயப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது எனவும் ஆளுநர் கூறினார்.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநர் இச்சந்திப்பில் எடுத்துக்கூறினார்.

விடயங்களைக் கேட்டறிந்துக் கொண்ட ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான கூட்டுறவு அபிவிருத்தி பிரிவின் தலைமை அதிகாரி லின்டா எரிக், அரச சார்பற்ற மற்றும் சர்வதேச அமைப்புகளை ஒருங்கிணைக்கும் செயற்பாடுகளை மேலும் வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் எனத் தெரிவித்தார்.

## சிங்கள - பௌத்த பேரினவாத..தொடர்ச்சி▲

பதன் மூலம் சித்திரவதை செய்வது, அச்சமூட்டுவது என்ற நோக்கின் அடிப்படையில் அவர்களுக்கெதிராக வழக்குகளைக் காவற்துறை கையாண்டு வருகின்றது.

தொடரும் பேரினவாத நிகழ்ச்சி நிரலின் காரணமாக வரலாறு காணாத பொருளாதார பேரழிவில் இத்தீவு சிக்கித் தவிக்கும் நிலையிலும், சிங்கள மனவுலகில் ஆழ வேரோடியுள்ள சிங்கள – பௌத்த பேரினவாதம் இவ்வாறான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்த வண்ணமே உள்ளது. அரசியல் தலைவர்கள் மட்டுமல்லாது சிறீலங்காவின் நிர்வாக இயந்திரமும் சிங்கள – பௌத்த பேரினவாத மயப்பட்டுள்ளதையே இவ்வகையான நிகழ்வுகள் வெளிக்காட்டுகின்றன. நாவளவில் இன நல்லிணக்கம் பற்றிச் சம்பிரதாயமாக சிங்கள – பௌத்த அரசியற் தலைவர்கள் பேசினாலும், அவர்களது செயற்பாடுகளும், இவ்வாறான நிகழ்வுகளின் போதான அவர்களின் மௌனங்களும் இன வெறுப்பூட்டும் பேச்சுகளும் இன நல்லிணக்கத்திற்கு எதிரான திசையிலேயே அமைந்துள்ளன. இது இத்தீவின் சகல தேசங்களுக்கும் நாசகரமான அழிவுகளை ஏற்படுத்தி வருகின்ற சிங்கள – பௌத்த பேரினவாதத்தை ஒருபோதும் கைவிடும் நோக்கம், சிங்கள – பௌத்த மக்களிடமோ, அதிகார வர்க்கத்தினரிடையோ, தலைவர்களிடமோ அல்லது பௌத்த மதத் தலைவர்களிடமோ இல்லை என்பதையே தெளிவாக வெளிக்காட்டி நிற்கின்றது.

இத்தீவின் புரையோடிப்போயுள்ள சிங்கள – பௌத்த பேரினவாத வெறியையும் அதனால் ஏனைய தேசங்கள் குறிப்பாக தமிழ்த் தேசம் எதிர்கொள்ளும் கட்டமைப்புசார் இனவழிப்பையும் கருத்தில் கொள்ளாது, சில நாடுகளும் சில அமைப்புகளும் நல்லிணக்கப் பொறிமுறைக்கு நிதியூட்டமும் ஆலோசனைகளும் வழங்குவது மட்டுமன்றி அதுபற்றி இனவழிப்பை எதிர்கொள்ளும் எம்மிடமே வக்காலத்தும் வாங்கி வருகின்றனர்.

இத் தீவில் நிகழ்ந்த தேசங்களுக்கிடையிலான ஆயுத மோதல்களின் முடிவை முரண்பாட்டின் முடிவாக தாமும் கற்பனை செய்து, எம்மையும் நம்பச் சொல்லும் இந்த வெளியகச்சக்திகளின் முகத்தில் கறையைப் பூசுவது போல் சிங்கள – பௌத்த பேரினவாதம் இவ்வாறான தமிழின விரோத செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்து வருகின்றது இந்நிலையிலாவது இச்சக்திகள் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் உண்மை முகத்தை உணரத் தலைப்படுமா என்பதுவே எங்கள் கேள்வியாகும்.

இவ்வாறான சிங்கள – பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரல்களையும், அதன்வழியிலான அருவருக்கத்தக்க, அழிவுகரமான ஆக்கிரமிப்புகளையும் மனித உரிமை மீறல்களையும் கண்டித்துக் கண்டித்து தமிழ் மக்கள் களைத்து விட்டார்கள்.

தமிழ் மக்கள் இவ்வாறான, தமது தேசிய அடையாளங்கள் மற்றும் தேசிய இருப்பு மீதான அனைத்து வகை அழிப்பு நடவடிக்கைகளுக்கும் எதிராக மத, பிராந்திய வேறுபாடுகள் இன்றி, ஒற்றுமையாக அணிதிரள வேண்டியமையே இன்றைய காலத்தின் தேவையாகும். தமிழ் மக்களின் தலைவர்கள் எனக் கூறிக்கொள்ளும் தலைவர்களும் கட்சிகளும் தேர்தல் அரசியலுக்கும் அப்பால் கட்சி பேதமின்றி ஒரே கொள்கையுடன் மக்கள் அணிதிரளடைவதற்கு ஊக்கிகளாகவும் முன்னணிச் சக்திகளாகவும் செயற்பட முன் வரவேண்டும். அழிவின் விளிம்பில் உள்ள எமது தேசம் பிழைத்திருப்பதற்குரிய வாய்ப்புக்கு, எம்மத்தியில் ஏற்படும் விழிப்புணர்வும் இவ்வாறான அணிதிரள்வும் மட்டுமே வழிவகுக்கும்.

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்திற்கு நாமும் எமது தோழமை கலந்த பங்களிப்பையும் ஆதரவையும் வழங்கி நிற்பதுடன் தமிழ் மக்களும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என வேண்டுகின்றோம். மேலும் இவ்விடயம் தொடர்பாக சிறையில் வாடும் எம் உறவுகளுக்கும் எமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம். – என்று உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.03.2024




உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். பாடல்கள் கேட்பதன் மூலம் திருப்தியான மனநிலை காணப்படலாம். உங்கள் கோபத்தை பிறரிடம் காட்டாதீர்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள்.

இன்று கவனச் சிதறல் காணப்படும். மனம் ஒருமித்து பணியாற்றினால் தான் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலும்.

நீங்கள் உங்கள் அணுகுமுறையில் களிப்புடன் இருக்க வேண்டும். உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க சாதாரணமாகவும் தாராளமாகவும் இருக்க வேண்டும்.

இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும். இன்று உங்கள் செலவுகளை நன்கு கண்காணித்து செலவுகளை தடுக்க வேண்டும்.

மனஅழுத்தம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்க வேண்டாம். முடிந்த அளவு அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள்.

சகபணியாளர்களுடன் நல்லுறவை பராமரிக்க வேண்டும். பணியிலிருந்து கவனத்தை திசை திருப்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் பேசும் பொழுது அமைதியை இழக்காதீர்கள். நல்லிணக்கத்தை பராமரிக்க இது மிகவும் முக்கியம்.

பணவளர்ச்சிக்கு சுமுகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளுக்காக அதிக அளவில் பணம் செலவழிக்க நேரலாம்.

மனஅழுத்தம் காரணமாக அசௌகரியமாக உணர்வீர்கள். தியானம் மேற்கொள்வது நன்மை அளிக்கும்.




உணர்ச்சிவசப்பட்ட அணுகுமுறை கூடாது. விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆன்மீக நாட்டமும் ஈடுபாடும் உங்களுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும்.

உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணிகளைக் கையாள்வதில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையை நீங்கள் இன்னும் சிறந்த முறையில் புரிந்துகொள்ள வேண்டும். அவர் உங்களை புரிந்துகொள்ள அவகாசம் அளியுங்கள்.

பணம் சம்பந்தமான வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பொறுப்புகள் அதிகமாக காணப்படும். அதனால் பணம் அதிகமாக செலவு செய்ய நேரும்.

முதுகுவலி காணப்படும்.




இன்று சமநிலையுடன் காணப்படுவீர்கள். இன்று புதிய நணபர்கள் மற்றும் கூட்டாளிகள் கிடைப்பார்கள். இன்று அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் பணிகளில் மிகுந்த வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் பணிகளில் திருப்தி காணப்படும். புதிய வேலைக்கான வாய்ப்புகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இன்று உங்கள் துணையை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

பணம் சம்பந்தமான உங்கள் அதிர்ஷ்டத்திற்கு முயற்சிக்க நிறைய வாய்ப்புகள் உள்ளன. உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

உங்களை திடமாக வைத்திருக்கும் வலிமை உங்களிடம் காணப்படும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்கள் சாதாரண செயல்கள் இன்று உத்வேகம்அளிக்கும். நீங்கள் பெரிதாக சாதித்ததைப் போன்று உணர்வீர்கள்.

பணிகளில் மிகுந்த சவால்களை எதிர்கொள்ள நேரும். ஓய்வுக்கான நேரம் குறைவாக இருக்கும். உங்கள் பணிகளை முறையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சரியான முறையில் தொடர்பாடல் கொண்டிருப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். சரியான தொடர்பாடல் காரணமாக புரிந்துணர்வு அதிகரிக்கும்.

இன்று கணிசமான தொகை சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது. உங்களின் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை அல்லது போனஸ் கிடைக்க வாய்ப்பு உள்ளது.




இன்று சாந்தமாக இருப்பது நல்லது. உங்கள் சபலங்களை இன்று கட்டுப் படுத்த வேண்டும்.

பணியில் இன்னும் நல்ல கவனம் செலுத்த வேண்டும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க அது உதவும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். நல்லிணக்கத்தை பராமரிக்க இதனை தவிர்க்க வேண்டும்.

குடும்பம் சம்பந்தமான காரியங்களுக்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் பணம்அதிக அளவில் செலவு செய்ய நேரும்.

சிறிய உடல்நலக் குறைவு ஒன்றிற்காக உங்கள் தாயாருக்கு மருத்துவ செலவு செய்ய நேரலாம்.




உங்கள் அன்றாட செயல்களை கவனமுடன் கையாள வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்காது. சகபணியாளர்களின் மூலம் சில தொந்தரவுகளை எதிர்கொள்ள நேரும். இதனால் நீங்கள் குழப்பமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி பூர்வமாக காணப்படுவீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு அதனைத் தவிரக்க வேண்டும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான பணம் மட்டுமே உங்களிடம் காணப்படும்.




இன்று வெற்றி எளிதாக கிடைக்கும். உங்கள் இணக்கமான தொடர்பாடல் மூலம் மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி உங்களை வெற்றியின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் பணியில் நீங்கள் மகிழ்ச்சியான ஆச்சரியங்களை காண்பீர்கள். நீங்கள் செய்யும் பணியில் எல்லாவிதத்திலும் நீங்கள் மகிழ்ச்சியைக் காணலாம்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வுடன் காணப்படுவீர்கள். அவருடன் நட்பான அணுகுமுறையை மேற்கொள்வீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணத்தை பயனுள்ள வழியில் பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.03.2024




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள்.

நீங்கள் மிகுந்த மனஅழுத்தத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் வெற்றியை அது தடுக்கும். உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்புடன் நடந்துகொள்ளுங்கள். இதை பராமரிப்பதன் மூலம் நீங்கள் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு வசதியாக இருப்பீர்கள். அதில் வளர்ச்சியும் காண்பீர்கள்.

தைரியத்துடனும் மன உறுதியுடனும் காணப்படுவீர்கள்.




இன்று குறைந்த அளவு நற்பலன்களே கிடைக்கும். வெற்றிக்கு முடிந்த அளவு முயலுங்கள். எப்பொழுதும் நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இன்று உங்கள் பணிகளை தொழில்சார்ந்த முறையில் அணுகுவீர்கள். உங்கள் திறமைகளுக்காக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் மனதில் நேர்மறை எண்ணங்கள் காணப்படும். அதனால் உங்கள் துணையுடனான உறவு சிறந்து காணப்படும். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பீர்கள்.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் நோக்கத்துக்குத் தடை ஏற்படும். முடிந்த அளவு பணத்தை சேமிக்க வேண்டும்.




இன்று உங்களுக்கு தேவை தைரியம். கஷ்டகாலங்கள் கடந்து போகும் நல்ல நாட்கள் வரும் என்ற நம்பிக்கையுடன் இருங்கள். நம்பிக்கையை இழந்து விடாதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும் பணிகளை முன்னுரிமைப்படி வரிசைப்படுத்தி செயலாற்றினால் கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிக்கலாம்.

உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அவருக்குத் துணையாக அவருடன் எப்பொழுதும் இருப்பீர்கள் என்று நம்பிக்கையளியுங்கள்.

எதிர்பாராத செலவினங்களுக்காக பணத்தை செலவு செய்ய நேரிடும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று சிறப்புடன் காணப்படுவீர்கள். உங்கள் செயல்களில் முன்னேற்றம் இருக்கும். உங்கள் அணுகுமுறையில் கவனத்துடன் இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் வளர்சியைத் தரும்.

பணியிடத்தில் இன்று பணியில் உங்களுக்கு ஆர்வம் அதிகரிக்கும். இன்று பணிகளில் உங்கள் இலக்குகளை அடைவீர்கள். திருப்தியான நிலை காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் சாந்தமாக செயல்படுவீர்கள். உங்கள் துணையுடன் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் நேரத்தை செலவழித்து மகிழ்வீர்கள். இது மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

வெற்றியை நோக்கி செல்லும் மனமும் பணத்தை சேர்க்க வேண்டும் என்ற எண்ணமும் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.









# நீர்த்தேக்கங்களில் குறையும் நீர் மட்டம்

(செ.தி.பெருமாள்)

மலைநாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையால் தொடர்ந்து நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் மிக வேகமாகக் குறைந்து வருகிறது.

காசல்ரி, மவுசாகலை,கெனியோன், லக்ஸபான. நவலக்ஸபான, விமல சுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டங்கள் குறைந்துள்ளன.

மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 23 அடி குறைந்து உள்ளது. காசல்ரீ நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 22 அடி குறைந்து உள்ளது.

நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் தாழ்ந்து காணப்படுவதனால் நீரில் மூழ்கிகிடந்த கட்டடங்கள் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன.

நீர் ஓடைகள்,அருவிகளின் நீர் வற்றிக் காணப்படுவதனால் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியும் பாரிய அளவில் குறைவடைந்துள்ளது. வறட்சி நிலையில் உள்ள பற்றைக்காடுகளுக்கு விசமிகள் மிருகங்களை வேட்டையாடுவதற்காகவும், பொழுது போக்குக்காகவும் தீ வைப்பதனால் நீரூற்றுக்கள் அற்றுப் போய் பாரிய குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயமும் காணப்படுகின்றது.

எனவே காடுகளுக்கு தீ மூட்டுவதை உடன் நிறுத்துமாறு பொது மக்களிடம் சூழல் ஆய்வாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக இந்த வறட்சியான காலநிலை காணப்படும் பட்சத்தில் விவசாயத்துறையும் பாதிக்கப்படுவதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.





# நெல் கொள்வனவிற்காக 50 கோடி ரூபா ஒதுக்கீடு

நெல் கொள்வனவிற்காக 50 கோடி ரூபா நிதியை ஒதுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

நெல் விநியோக சபைக்கு இந்த நிதியை வழங்க அவர் தீர்மானித்துள்ளார்.

இதனடிப்படையில், இன்று முதல் அனைத்து மாவட்டங்களிலும் இரு நெற்களஞ்சியசாலைகளிலிருந்து நெல் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நெல் கொள்வனவிற்காக 2 பில்லியன் ரூபாவை வழங்க



மாறு நிதியமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும் அவர்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் எதுவும் வழங்கப்படவில்லையென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தார்.

இதனால் விவசாய நம்பிக்கை நிதியத்திலிருந்து 250 மில்லியன் ரூபாவை பெற்றுக்கொண்டு நெற் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி நேரடியாக தொடர்புபட்டார் எனவும், இதற்கமைவாகவே 50 கோடி ரூபா நிதியை ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.



## வறட்சியால் தண்ணீர் விநியோகம் பாதிப்பு;

# அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரமே தண்ணீரைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தல்

நாட்டில் நிலவும் வறட்சியான வானிலையினால் 15 தண்ணீர் விநியோக நிலையங்களின் தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 06 தண்ணீர் விநியோக நிலையங்களில் நேர அட்டவணைக்கமைய தண்ணீர் விநியோகம் முன்னெடுக்கப்படுவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதி பொது முகாமையாளர் அனோஜா களுஆரச்சி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கம்பளவத்த, புசல்லாவை, கொட்டகலை, ஹட்டன், ஊருபொக்க ஆகிய பகுதிகளில் நேர அட்டவணைக்கமைய தண்ணீர் விநியோகம் முன்னெடுக்கப்படுகின்றது.

வறட்சியான வானிலை நிலவும் இந்த காலப்பகுதியில் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் தண்ணீரைப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனிடையே, நிலவும் வறட்சியான வானிலை எதிர்வரும் மே மாதம் வரை நீடிக்கும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காற்றின் வேகம் குறைவடைந்துள்ளமை மற்றும் பல்வேறு பிரதேசங்களின் தாழ்வு வளிமண்டலத்தில் நீராவியின் அளவு அதிகரித்துள்ளமை ஆகியன இந்த நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளதாக திணைக்களத்தின் எதிர்வுகூறல் பிரிவின் பணிப்பாளர் அஜித் விஜேமான்ன குறிப்பிட்டார்.



## பால் மாவின் விலை ரூ. 150 குறைகிறது

இன்று முதல் ஒரு கிலோ கிராம் பால் மாவின் விலை 150 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ரமழான் மற்றும் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு இவ்வாறு விலை குறைக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விலையை குறைப்பது தொடர்பில் பால் மா இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



## மத்திய அதிவேக வீதியின் ஒரு பகுதி போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டது

மத்திய அதிவேக வீதியின் ஒரு பகுதியில் நேற்று முதல் 14 நாள்களுக்கு போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

புனரமைப்பு பணிகளுக்காக ஒரு கிலோ மீட்டர் வரையான தூரத்திற்கு போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அதிவேக வீதி பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் ஆர்.ஏ.டி. கஹபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மீரிகம – குருணாகல் மத்திய அதிவேக வீதியின் 56ஆவது கிலோமீட்டர் முதல் 57ஆவது கிலோமீட்டர் வரையான பகுதியிலேயே இந்தப் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.